THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No. 76/2016**

Deposition of PW.2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **16.09.2022.** Evidence Recorded Time: 12.04 P.M. to 12.08 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராணி | Caste | : | |
| S/o & W/o. | : | சரவணன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**முதல் விசாரணை**:-

நான் இதில் மனுதாரர் தரப்பு சாட்சி.2 ஆவேன். எனது சத்திய பிரமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2-எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என் அப்பாவிற்கு விபத்தில் வலது காலிலும் கண் பகுதியிலும் இரண்டு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். மருத்துவமனையில் ஏற்பட்ட செலவு விவரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு ரூ.6,77,800/- மருத்துவ செலவு ஏற்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பில்களில் இரண்டு பில்கள் இருமுறை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் ரூ.3,71,145/- தான் மருத்துவ செலவிற்கான பில்கள் என்றாலும் சரியல்ல. விவசாய நிலங்கள் இன்று வரை எங்களிடம்தான் உள்ளது. எனது அப்பாவிற்கு ஏற்பட்ட காயங்களுக்கான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் கேட்டிருக்கும் இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் தவறுதலான மருத்துவ பில்கள் என்றாலும் அவை ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றாலும் சரியல்ல.

ஒம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.